தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.24225/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு V.சிவராமன்,<br>த/பெ.வைரவநாதன்,<br>167, வேளச்சேரி மெயின் ரோடு,<br>காமராஜபுரம், சென்னை – 600 073. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,<br>பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம்,<br>பேசின் பாலம், சென்னை – 600 012. |

*****

மனுதாரர் திரு V.சிவராமன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு T.செல்வராஜன், பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம், சென்னை இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 04.02.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு மின்சார வாரியம் எரிசக்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களிடம் சில தகவல்களைக் கேட்டிருக்கின்றார். மனுதாரருடைய மனு தகவலுக்காக 04.02.2009 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை–2–க்கு அனுப்பப்பட்டுள்ளது. தகவல் பெறாததால் 13.04.2009 அன்று மனுதாரர் சட்டப் பிரிவு 19(1)–ன்கீழ் துறைக்கு மேல் முறையீடு செய்துள்ளார். 15.06.2009 மற்றும் 23.09.2009 தேதிகளில் சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையத்தில் தான் பணிபுரிந்த 6 மாத காலத்திற்கு (ஜுலை 2007 முதல் டிசம்பர் 2007 வரை) சம்பளம் வழங்காதது குறித்து தகவல்கள் வேண்டியுள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது மனுதாரர் 30.06.2007 அன்று ஒய்வுபெற்ற பிறகு பண்டகச்சாலைப் பொருட்களை ஒப்படைப்பதற்கு 3 மாதங்கள் தேவைப்படுவதால் பணிநீட்டிப்பு வழங்கப்பட மனுதாரர் 06.07.2007–ல் முறையிட்டுள்ளார் என்பது தெரிய வந்தது. இன்றைய விசாரணையில் பொருட்களை ஒப்படைப்பதற்கு 6 மாத காலம் ஆனதாகக் கூறி, அதற்கு உண்டான கோப்புகளை மனுதாரர் காண்பித்தார். பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது பொதுவாகப் பண்டகச்சாலை பொருட்கள் அனைத்தையும் ஒப்படைத்த பிறகே தடையில்லாச் சான்று வழங்கப்படுமெனவும், அதற்குப் பிறகுதான் உரிய ஓய்வூதியப் பலன்கள், பணிக்கொடை போன்றவை அளிக்க வேண்டுமெனவும், அனைத்தும் முறையாகச் செய்யப்பட்டு, மனுதாரருடைய குறைகள் நிலுவையின்றி வழங்கப்பட்டதாகக் கூறினார்.

04.07.2007அன்று மனுதாரர் பொறுப்புகளை ஒப்படைத்ததற்கு உரிய கடிதத்தின் நகல் ஆணையத்திற்கு அளிக்கப்பட்டது. உரிய தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. பணி நீட்டிப்பிற்கான ஆணை எதுவும் வழங்கப்படவில்லையெனும் போது அதற்கான ஊதியத்தை வழங்குவது குறித்து தகவல்கள் தங்களிடம் இல்லையென்று பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்றுக்கொண்டு வழக்கினை முடிவு செய்கிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.01.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.24225/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம்,
பேசின் பாலம், சென்னை – 600 012.

திரு V.சிவராமன்,
த/பெ.வைரவநாதன்,
167, வேளச்சேரி மெயின் ரோடு,
காமராஜபுரம், சென்னை – 600 073.

“*ptl*”